விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால், ஒவ்வொருவருக்கும் இருக்கின்ற அதே உணர்வைத்தான் நான் இங்கே பிரதிபலித்ததாக எண்ணி, இன்று நடைபெற்ற இந்தக் கருத்தோட்டத்தை டெல்லியிலே இருப்பவர்கள் அல்லது மத்தியிலே இருக்கின்றவர்கள் உணர்ந்து, இனி வெளியிடுகின்ற விளம்பரங்களில் தமிழர்களுடைய மனம் புண்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அளவில் இந்தப் பிரச்சினையை முடிவு செய்யலாம் என்று கருதுகின்றேன். (குறுக்கீடுகள்)

(இ) நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். one by one-ஆகத்தான் எடுக்க முடியும். (குறுக்கீடுகள்) one by one-ஆகத்தான் எடுக்க முடியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) திரு. சி. கோவிந்தசாமி.

முற்பகல் 10-40

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு செய்தியை இந்த அவையிலே குறிப்பிட விரும்புகிறேன். வருகின்ற செப்டம்பர் 5 ஆம் நாள், கேரள மக்கள் மகிழ்வோடு கொண்டாடுகின்ற ஓணம் பண்டிகை வருகின்றது. நம்முடைய தமிழகத்திலே கேரள மாநிலத்தை ஒட்டியுள்ள மாவட்டங்களில் கணிசமாக கேரள மக்கள் வசித்து வருகிறார்கள். குறிப்பாக, குமரி, கோவை மற்றும் நீலகிரி போன்ற மாவட்டங்களிலும், சென்னையிலும் கணிசமாக கேரள மக்கள் வசிக்கிறார்கள். அதில் குமரி மாவட்டத்தில் மட்டும் தற்போது ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளிக்கப்பட்டு வருகிறது. கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த கேரள மக்கள், நீண்டகாலமாக தங்களுக்கும் அந்த விடுமுறை அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து வருகிறார்கள். அது இதுவரையில் நிறைவேறவில்லை. மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த நல்ல நேரத்தில் தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று பெரும் எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கேரள மக்கள் அதிகம் வசிக்கக்கூடிய கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தில்

வாழக்கூடியவர்களுக்கு குமரி மாவட்டத்தைப் போல அவர்களுக்கும் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை அளித்து, அவர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கேரளத்தைச் சார்ந்த 'ஈழவா' சமூகத்தைச் சார்ந்த மக்கள் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். அதில் தென்கேரளத்தைச் சார்ந்தவர்கள் 'ஈழவா' என்றும், வடகேரளத்தைச் சார்ந்தவர்கள் 'தியா' என்ற சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். அவர்களும், குறிப்பிட்ட, அந்த இரண்டு மாவட்டங்களிலே கணிசமாக வசித்து வருகிறார்கள். குமரி மாவட்டத்திலே அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. கோவை மற்றும் நீலகிரியிலே ஏற்கெனவே வழங்கப்பட்டது. இடையிலே கடந்த ஆட்சியிலே அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த பிற்படுத்தப்பட்டோருக்கான சான்றிதழை மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அந்த மக்களின் நீண்ட எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தர வேண்டுமாய் அன்போடு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை, நேற்றையதினம் ஒரு கடித வடிவத்திலே அவர்களால் என்னிடத்திலே விண்ணப்பமாகத் தரப்பட்டது. அதிலே நீலகிரி, கோவை, குமரி ஆகிய மாவட்டங்களிலும் ஓணம் பண்டிகைக்காக மாவட்ட அளவிலே விடுமுறை வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்த விண்ணப்பத்திலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குமரி, நீலகிரி, கோவை ஆகிய 3 மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலே ஓணம் பண்டிகைக்கான விடுமுறை உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.. (குறுக்கீடு) திரு. கோவிந்தசாமி, நன்றி வேண்டுமானால் சொல்லுங்கள்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 ஆகஸ்ட் 25

உண்மையிலேயே நீண்டகாலமாக கேரளத்தைச் சார்ந்த மக்கள், அந்த மாவட்டங்களிலே வாழ்ந்து வரக்கூடியவர்களின் கோரிக்கையை இன்றைக்கு நிறைவேற்றித் தந்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நன்றி சொல்வதைக்கூட சிலர் பொறுத்துக்கொள்ள முடியாமல் எதற்கெடுத்தாலும் (குறுக்கீடுகள்) இருங்கள் அய்யா, சும்மா இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்று கேளுங்கள். நன்றி சொல்வதற்குரிய காரியங்களை இந்த அரசு செய்கிறபோது, மனப்பூர்வமாக நன்றி தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தகாலத்தில் நீங்கள் நன்றி சொல்வதற்குரிய எந்தக் காரியத்தையும் செய்யாத காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நன்றி சொல்வதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், நீங்கள் ஆத்திரப்பட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றிதான் சொல்கிறார், திரு. கோவிந்தசாமி. உட்காருங்கள்.

(ஈ) பேருந்து மறியலில் ஈடுபட்டு கைதாகியுள்ள சேலம் சட்டக் கல்லூரி மாணவர்களை விடுதலை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்க வரலாற்றிலே மாணவர்களுடைய பங்கு என்பது, வரலாற்றிலே யாரும் மறைக்கவோ, மறுக்கவோ, மறக்கவோ முடியாத ஒன்றாக இருக்கின்ற ஒன்று. தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 10, 15 தினங்களுக்கு முன்பாகப் போராடி, கோட்டையிலே மனு கொடுக்க வந்தார்கள். அன்றைக்கு அந்தப் பிரச்சினையின் serious தன்மையைக்கூட நான் வலியுறுத்தி, பத்திரிகையை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே காட்டினேன். அதன் பிறகு அந்த சேலம் தனியார் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஜனநாயக ரீதியில் ஆர்ப்பாட்டம் செய்தபோது, காவல் துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டு, கடுமையான சட்டப் பிரிவின்கீழ் கைது செய்யப்பட்டு, அவர்கள் வேலூர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது அவர்களை உடனடியாக விடுதலை செய்து அவர்களுடைய கோரிக்கைகளான அந்தக் கட்டணத்தைக் குறைத்து, அந்தக் கல்லூரி நிர்வாகத்தினுடைய அடிப்படைத் தேவைகள்